# சட்டபிரிவு மாற்றல் அறிக்கை

**அரசு** காவல் ஆய்வாளர்
கே.8.அரும்பாக்கம் காவல் நிலையம்,
குற்றப்பிரிவு,சென்னை.106.

**பார்வை** கே.8 அரும்பாக்கம் குற்றஎண். 277/2023
சட்டப்பிரிவு 406,465 @ **406,409,420,465,471**

**பொருள்** பார்வையில் கண்ட குற்ற வழக்கான 277/2023 ன் சட்டப்பிரிவை 406.465 IPC, -ல் இருந்து சட்டப்பரிரிவு 406, 409, 420, 465, 471, IPC ஆக மாற்றம் செய்வது சம்மந்தமாக

**பெருமதிப்பிற்குரியஅய்யா,**

கடந்த 19.10.2023 ஆம் தேதி மதியம் 12.30 மணிக்கு மனுதாரர் திரு.ஜோசப் தவமணி ஆ/வ 44, த/பெ. J C S . தவமணி, 3E ஜமால் ஜெம்ஸ், பச்சையப்பன் காலேஜ் ஹாஸ்டல் ரோடு, சேத்பட், சென்னை 106 என்பவர் சென்னை மாநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் கொடுத்த புகாரில் தான் 2019 ல் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடேட் நிறுவனத்தில் வீட்டுக்கடன் பெற்றுள்ள்தாகவும் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடேட் நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் மற்றும் அப்பஜாஜ் அலையன்ஸ் லைப் இன்சூரன்ல் நிறுவனத்தால் வழங்கப்பட்ட குரூப் கிரிடிட் புரேடக்ஸ்சன் பிளஸ் என்ற வீட்டுக்கடனுடன் இணைக்கப்பட்ட காப்பீட்டு தொகையை பெறுமாறு பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் தனக்கு அறிவுறுத்தியதாகவும் காப்பீட்டாளர் மற்றும் அதன் படி 28.02.2019 முதல் 28.02.2029 வரை செல்லுபடியாகும் காலத்திற்கு 0338604180 என்ற குழு மாஸ்டர் பாலிசி மற்றும் உறுப்பினர் பாலிசி எண் . 0359372586 ஐக் கொண்ட தீவிர நோய் கவரேஜ் பாலிசியுடன் கூடிய ஆயுள் காப்பீட்டு பாலிசியை ரூபாய் 71,30,117/- பிரீமியமாக ரூபாய் 5,53,000/- கட்டியதாகவும் தனது வீட்டு கடனை 04.02.2021 ம் அன்று முன்கூட்டி லோன் பணத்தை முழுவதும் கட்டி 10.02.2021 அன்று கடனுக்கான NOC பெற்றதாகவும் அதன் பின்பு ஆகஸ்ட் 2021 ல் தனக்கு நாள் பட்ட மைலோயிட் லுகேமியா ( இரத்த புற்று நோய் ) இருப்பது கண்டறியப்பட்டதாகவும் கடுமையாக நோய்கான பாலீசி என்பாதால் நான் மருத்துவ காப்பீடு வேண்டி மனு கொடுத்ததாகவும் 23.12.2021 அன்று 11.03.2019 தேதியிட்ட விண்ணப்பத்தில் தனது நீரழிவு, இரத்த கொதிப்பு, கொலஸ்ட்ரால் நோயை மறைத்து ஏமாற்றி விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்து தனது காப்பீட்டை ரத்துசெய்திருப்பதாக கூறினார்கள். இதனை எதிர்த்து தான் ஒபன்ஸ்மேன் அலுவலகத்தில் முறையீடு செய்ததாகவும், அங்கு அவர்கள் தெரிவித்த 11.03.2019ம் தேதி விண்ணபத்திற்கு பதிலாக 25.02.2019 தேதியிட்ட விண்ணபத்தை பஜாஜ் அலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் சார்பாக சமர்ப்பித்தார்கள். அந்த விண்ணபத்தை தான் பூர்த்தி செய்யவில்லை அந்த விண்ணபத்தில் இடப்பட்ட கையொப்பமும் தன்னுடையது கிடையாது, முழு படிவமும் தன்னால் நிரப்பபடவில்லை என்றும் மேலும் தனது நியாயமான கோரிக்கையை மறுப்பதாக காப்பீட்டாளர்கள் இதை முற்றிலுமாக போலியாக உருவாக்கப்பட்டது என்றும்

இச்சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட அனைவருக்கும் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க கோரி கொடுத்த புகார் மீது கே.8அரும்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்-277/2023 சட்டபிரிவு 406,465 இதசவில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் மனுதாரர் விண்ணப்பித்த மருத்துவ காப்பீட்டை பெற்று தடய அறிவியல் துறைக்கு அனுப்பி கையொப்பங்களை ஆய்வு செய்து கிடைத்த அறிக்கையில் இருந்தும் எதிரிகள் குற்றம் செய்யவேண்டும் என்ற பொதுவான லாபநோக்கத்தோடு, நேர்மையற்ற முறையில் சுயலாபம் கருதி நம்பிக்கை மோசடி செய்து பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீடு தொகையை கிடைக்கவிடாமல் எதிரிகள் செய்த செய்கைக்கான சட்டபிரிவை 406, 465, IPC, -ல் இருந்து சட்டப்பரிவு **406,409,420,465,471** IPC ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

காவல் ஆய்வாளர் (குற்றப்பிரிவு)
கே.8 அரும்பாக்கம் காவல் நிலையம்
அரும்பாக்கம், சென்னை 600 106

CERTIFIED TO BE TRUE COPY
Examined by 23/1/25
Superintendent
Copy... 23/1/25

CC No. 36/2025
CHIEF METROPOLITAN MAGISTRATE COURT EGMORE CHENNAI
1 Application Made on 22/1/25
2 Grant Order on 22/1/25
3 Stamps called for on 23/1/25
4 Stamps deposited on 23/1/25
5 Copy Made ready on 23/1/25
6 Copy delivered on 23/1/25
7 Copy Application no. 614/25
COPYIST SUPDT.